# Leibnitz's Contribution to Mind - Body Problem in Modern Philosophy- A Critical Analysis Based on *Monadology*.

**P. Poologanathan**
M.Phil. student, University of Peradeniya
ponnuthurainathan1985@gmail.com

## Abstract:

One of the most ancient problems of Philosophy is the problem of the relationship between mind and body. How could mind and body, which are different in nature, active one another? Several philosophers from Greek to the current period have been put forwarding solutions for finding a solution to this problem between mind and body. Descartes separated mind and body and established the dualism. He said that the Pineal Gland is the reason behind the driving of one another by these two things which have natures that are different from one another. Here a problem arises as to how could the pineal gland which is substance in nature, could act the mind which is non substance in nature. Spinoza formulated Pantheism through his Monism principle and said that both body and mind are two natures of God who is a mono thing. Here a question rises as to how the mono thing God could possess two natures? At this stage, modern period philosopher Leibnitz put forwarded his monads principle to find a solution to the mind –body problem in his book Monadology. The objective of this study is to critically analyze whether this principle of Leibnitz constituted a correct solutions to problems regarding body and mind prevailing so far. For this study, analytical and critical methods are used and also data collected from secondary sources.

***Keywords:*** *Mind- body, Pantheism, Monism, Monads, Dualism.*

## நவீன மெய்யியலில் உடல்-உளம் தொடர்பான பிரச்சினைக்கு லைப்பினிஸ்டின் பங்களிப்பு- *மொனாடோலொஜி* எனும் நூலினை அடிப்படையாகக் கொண்டதோர் விமர்சனப் பகுப்பாய்வு.

### 01. ஆய்வின் அறிமுகம் (Introduction)

மெய்யியலில் ஆராயப்படும் பிரச்சினைகளில் உடல்-உளம் தொடர்பான பிரச்சினை மிக பழமை வாய்ந்ததொன்றாகும். உடல்- உளம் பற்றிய பிரச்சினை என்றால் என்ன? என்பதை ஆராயும் போது வேறுபட்ட இயல்புகளைக் கொண்டமைந்த உடலும்-உளமும் எவ்வாறு ஒன்றையொன்று செயற்படுத்த முடியும் என்பதை ஆராயும் பிரச்சினையாகும்.[1] இப்பிரச்சினைக்கு அதாவது வேறுபட்ட இயல்புகளைக் கொண்ட உடலும் உளமும் எவ்வாறு ஒன்றினையொன்று செயற்படுத்த முடியும் என்பதனை முதலில் பிளேட்டோ தனது குடியரசு *(Republic)* எனும் நூலின் 11வது அத்தியாயத்தில் ஆராய்ந்து மனதினை சடமல்லாத வஸ்து எனக் கருதி உடலுக்கும் உளத்திற்கும் நேரிய வேறுபாடு இருப்பதனை விளக்கினார். பிளேட்டோ மனதினை வஸ்து எனக் குறிப்பிட்டது மனதினை பொருளுக்குரிய தன்மை கொண்டது எனும் நிலைக்கு உயர்த்தியது.[2]

பிளேட்டோவைத் தொடர்ந்து மத்திய கால அகஸ்தீன் போன்றோர்களினது சிந்தனைகளிலும் உடல்-உளம் தொடர்பான பிரச்சினை ஆராயப்பட்டது. எனினும் 17ம் நூற்றாண்டிலேயே குறிப்பாக நவீன மெய்யியலின் தந்தை என போற்றப்படும் டேக்காட்டின் *Discourse of Method* எனும் நூலில் உடல்-உளந் தொடர்பான பிரச்சினை தீவிரமாக ஆராயப்பட்டது. டேக்காட், உடல்-உளம் ஆகிய இரண்டினையும் தீர்க்கமாக வேறுபடுத்திப் பேசியதுடன் அவற்றின் இயல்புகள் முற்றிலும் ஒன்றுக்கொன்று எதிர்மறையானவை என்றும், உடலின் இன்றியமையாத இயல்பு பரப்புடைமை, உளத்தினியல்பு சிந்தித்தல் என்றார். அவற்றினது இயல்புகள் முற்றிலும் எதிரான தன்மையினைக் கொண்டு காணப்பட்டாலும் அவை ஒன்றினையொன்று செயற்படுத்துகின்ற தன்மையினைக் கொண்டிருப்பதை காணலாம். எடுத்துக்காட்டாக, எனது உளம் எனது உடலாகிய கை அசைய வேண்டும் என எண்ணும் போது சடமாகிய கை அதனடிப்படையில் செயற்படுகிறது. அத்தோடு எனது உடலில் நோ ஏற்படுகின்ற வேளையில் சிந்திக்கும் தன்மை பெற்ற உளம் அதனை உணர்கின்றது. உண்மையில் உடலுக்கும் - உளத்திற்கும் நேரடி தொடர்பு இல்லையெனில் மேற்படி செயற்பாடுகள் எவ்வாறு நிகழ முடியும்?. அதாவது பண்பிலே வேறுபட்ட பொருட்கள் எவ்வாறு ஒன்றினையொன்று செயற்படுத்த முடியும்? எனும் வினாவிற்கு டேக்காட் மூளையின் அமைந்துள்ள பீனியற் சுரப்பியே (Penile gland) காரணம் என்றார்.[3] ஆயினும் பீனியற் சுரப்பியும் சடத்தன்மை பெற்ற ஒன்றாகக் காணப்படுவதனால் எங்ஞனம் அது சடத்தன்மையற்ற உளத்தை இயக்க முடியும்? என்றவாறாக பிரச்சினை நீண்டு செல்கின்றது. இந்நிலையில் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஹெலண்டு நாட்டில் தறுவாய்க் கொள்கை (Occasionalism) தோற்றம் பெற்றது. இவர்கள் உடல்- உளம் ஆகிய இரண்டும் ஒன்றினையொன்று செயற்படுத்த முடியாது எனவும், அவற்றினுடைய செயற்பாட்டிற்கு கடவுளையே மூல காரணமாக குறிப்பிட்டு மேற்படி பிரச்சினைக்கு தீர்வுகாண முற்பட்டனர்.

இதேவேளை டேக்காட்டின் இருமை வாதத்தை ஏற்காத ஸ்பினோஷா ஒருமை வாதத்தினை நிறுவி அனைத்திறைக் கொள்கைக்கு வழிவகுத்தார். ஸ்பினோஷாவின் கொள்கையின் படி, உடல் - உளம் ஆகிய இரண்டும் கடவுளில் உள்ளடங்குபவை என்றும் வேறுபட்ட இயல்புகளை கொண்டமைந்த இவ்விரண்டும் ஒரே பொருளான கடவுளின் இரு இயல்புகள் என்றும், இவை இரண்டும் இணைந்து செயலாற்றுகின்றன எனவும் கடவுளே அதற்கு அடிப்படை எனும் அனைத்திறைக் கொள்கையை முன்வைத்தார்.[4] ஆயினும் பிற்காலத்தில் லைப்பினிஸ் இதில் பல குறைபாடுகளை கண்டு கொண்டார். குறிப்பாக ஒரே பொருளான கடவுள் எவ்வாறு வேறுபட்ட இரு இயல்புகளை கொண்டிருக்க முடியும் என்பதும், ஸ்பினோஷா பொருட்களின் ஒருமைப்பாட்டை நிலைநாட்டினாலும் அது எவ்வாறு பலவாக வேறுபாடடைகின்றது என்பதனை நிலை நாட்டுவதில் வெற்றி பெறவில்லை என்றும் குறிப்பிட்டார். எனவே லைப்பினிஸிக்கு முன்பிருந்த எவரும் மனித உடலுக்கும், உளத்திற்குமான உறவினை சரியான முறையில் விளக்கவில்லை. எனவே இத்தகைய பின்னணியில் மேற்படி உடல் - உளம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வாக லைப்பினிஸ்ட் தனது மொனாடோலொஜி (Monadology) எனும் நூலில் மொனாட்டுக் கொள்கையை முன்வைக்கிறார்.

எனவே இவ்வாய்வானது மெய்யியலில் நீண்ட காலமாக தொடர்கின்ற உடல்-உளந் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு லைப்பினிஸ் தனது மொனாடொலொஜி எனும் நூலினூடாக முன்வைக்கும் தீர்வுகள்

பொருத்தமானதாக அமைகின்றதா? என்பதனைக் கண்டறிந்து விளக்குவதற்கு அந்நூலினை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்கிறது.

### 02. ஆய்வுப் பிரச்சினை (Research problem)

நவீன காலத்தில் லைப்பினிஸ்னால் முன்வைக்கப்படும் மொனாட்டுக் கோட்பாடு உடல்-உளம் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொருத்தமான தீர்வாக அமையுமா? என்பது இவ்வாய்வின் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

### 03. ஆய்வின் நோக்கம் (Objective of research)

லைப்பினிஸ்டினால் முன்வைக்கப்படும் மொனாடு பற்றிய கோட்பாடு உடல்-உளம் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொருத்தமான தீர்வாக அமைந்து காணப்படுகின்றதா? என்பதனைக் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

### 04. ஆய்வின் கருதுகோள் (Research hypothesis)

லைப்பினிஸ்டினால் முன்வைக்கப்படும் மொனாடு பற்றிய கோட்பாடு பாரம்பரியமாக நிலவிவருகின்ற உடல்-உளம் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போதியதாக அமையவில்லை.

### 05. ஆய்வின் முறையியல் (Research Methodology)

இவ்வாய்வின் நோக்கத்தினை நேர்த்தியான முறையில் வடிவமைப்பதற்கு பகுப்பாய்வு முறை (Analytical Method) மற்றும் விபரண முறை (Descriptive Method) என்பன பயன்படுத்தப்படுவதோடு இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் இரண்டாம் நிலை தரவுகளாகப் பெறப்பட்டு இவ்வாய்வு பூரணப்படுத்தப்படுகின்றது.

### 06. ஆய்வின் வரையறை (Limitation of research)

கிரேக்க காலம் முதல் உடல்-உளம் பற்றிய பிரச்சினை தொடர்பாக பல கொள்கைகள் தோற்றம் பெற்றிருப்பினும், இவ்வாய்வானது நவீன கால மெய்யியலாளரான லைப்பினிஸ்டின் கொள்கையை (மொனாடுக் கோட்பாடு) அடிப்படையாகக் கொள்கிறது.

### 07. ஆய்வு தொடர்பான விவாதங்கள் ( Discussions)

உடல்-உளம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தோன்றிய பாரம்பரிய சிந்தனைகளையோ அல்லது டேக்காட், கெலிங்ஸ், மால்பிரான்ஸ் (தறுவாய் கொள்கையினர்), ஸ்பினோஷா போன்றோர்களினது சிந்தனைகளையோ ஏற்காத லைப்பினிஸ் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் புதியதொரு திட்டத்தைத் தனது மொனாடோலொஜி (*Monodology- 1714*) எனும் நூலில் முன்வைத்தார்.

டேக்காட், ஸ்பினோஷா, தறுவாய் கொள்கையினர் மற்றும் பாரம்பரிய மெய்யியலாளர்கள் போன்றோர்கள் அனைவரும் உடல் (சடம்) அதாவது பொருள் என்பது அளவு நிலை அல்லது பரப்படைமையைச் சுட்டுவது (Quantive or

Extensive nation of substance) எனும் கருத்தினையே நம்பினர். எனவே இவர்களது சிந்தனையில் ஏற்பட்ட இடர்பாட்டினைத் தவிர்ப்பதற்கு பொருள் பற்றிய அளவு நிலையைக் குறிப்பிடாத கருத்தை (Non Quantive) அதாவது பொருள் பண்புச் சுட்டுடையது எனும் கருத்தை லைப்பினிஸ்ட் முன்வைத்தார்.[5] இவர் பொருளின் இன்றியமையாத இயல்பாக அளவு நிலையைக் குறிப்பிடவில்லை. எனவே பொருள் என்பது பரப்புடைமை உடையது என்பதை விட ஆற்றல் (Force) உடையது என்பதே பொருத்தமானதென முடிவு செய்தார். இயக்கப் போக்கும் (Dynamic) ஆன்மீகத் தன்மையும் (Spiritual) உடையதே இத்தகைய பொருள் என்றும் இப்பொருளையே லைப்பினிஸ் மொனாடுகள் எனவும் அழைத்தார்.[6] இக்கொள்கையை இவர் மொனாடோலொஜி எனும் நூலில் விளக்குகின்றார்.

பொருள் பற்றிய கொள்கையை மாற்றியமைக்க முனைந்த லைப்பினிஸ் இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருட்களையும் மொனாடுகளாகக் குறிப்பிட்டார். அவர் மொனாடுகள் பல என்பதனை தனது கொள்கையின் தொடக்க நிலையாகக் கொண்டிருந்தார். இம்மொனாடுகள் என்றும் உள்ளவை என்றும், அவற்றை அழிக்க முடியாது என்றும் அருஞ் செயல் அல்லது அற்புதத்தால் மட்டுமே அதனை அழிக்க முடியும் என்றும் கருதினார். எல்லாச் சடப்பொருளும் உயிர்த்தன்மை பெற்றிருக்கின்றது. சடப்பொருளின் ஒவ்வொரு பகுதியும் தாவரங்கள் நிறைந்த ஒரு தோட்டத்தை அல்லது மீன்கள் நிறைந்த ஒரு குட்டையைப் போன்றிருக்கின்றது. எனவே இப்பிரபஞ்சத்திலுள்ள எதுவும் உயிரற்று இருக்கவில்லை. கல், செடி, மரம் இவற்றிலும் உளம் இருப்பதாகவே கருத முடியும். ஆனால் லைப்பினிஸ் எல்லாவற்றிலும் ஒரே அளவில் அல்லது நிலையில் உளம் இருப்பதாகக் கருதவில்லை. அவற்றின் இயல்புகள் மாறுந்தன்மை கொண்டதாகக் கருதினார். [7]

மொனாடுகளில் பல்வேறு நிலைகள் இருப்பதாகக் குறிப்பிட்ட லைப்பினிஸ் அவற்றின் நிலைகளுக்கு ஏற்ப அதனை 03 வகையாகப் பிரித்தார்.[8]

1. நனவிலி நிலையிலுள்ள மொனாடு அல்லது வெற்று நிலையிலுள்ள மொனாடு (Unconscious or bare).
2. நனவு நிலையிலுள்ள மொனாடு (Conscious).
3. தன்னனவுள்ள மொனாடு அல்லது அறிவுள்ள மொனாடு (Self-conscious).

பொதுவாக ஒவ்வொரு மொனாடும் புலனறிவும், தன்னிலெழு உள்மாற்றமும் கொண்டிருப்பதனால் அதனை ஆன்மா என்று கூறலாம். மேற்கூறப்பட்ட மூன்றும் படைக்கப்பட்ட மொனாடுகளாகவும் (Created monads) கடவுள் படைக்கப்படாத மொனாடு (Uncreated monads) ஆகவும், மொனாடுகளுக்கெல்லாம் மொனாடு ஆகவும் (Monad of monads) விளங்குகின்றார்.[10] ஒவ்வொரு மொனாடும் தன் போக்கிலேயே அளவில் வேறுபட்ட தன்மையில் தெளிவு கொண்டு உலகைப் பிரதி செய்கின்றன. மொனாடுகள் உயர்வு, தாழ்வு எனும் தன்மைக்கேற்ப மிகத் தாழ்ந்ததிலிருந்து உயர்ந்தது வரை பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளன. மொனாடுகள் உயர்வு, தாழ்வு எனும் தன்மைக்கேற்ப தெளிவுடனும் தனிப்பட்ட தன்மையுடனும் உலகைப் பிரதி செய்கின்றன.

இப்பிரபஞ்சம் எண்ணற்ற பல மொனாடுகளினால் ஆனது. ஒன்றைப் போல் மற்றொரு மொனாடு இருக்க முடியாது. அவை பண்பில் வேறுபட்டவை. அவ்வாறு வேறுபாடுகள் இல்லாத மொனாடுகள் இருக்க முடியாது. மொனாடுகளின் எண்ணிக்கை முடிவற்றதாகவும் ஒவ்வொரு மொனாடும் ஒரு தொடராகக் கருதக்கூடிய நிலையிலும் இருக்கிறது. ஒவ்வொரு மொனாடும் பரிணாம நிகழ்ச்சி முறையில் அமைந்ததுடன் தன்னுடைய இயல்பில் ஓர் அகக்கட்டாய தன்மையும் கொண்டது. மொனாடுகள் புறத்திலிருந்து வரையறுக்கப்படுவதில்லை. மொனாடுகளுக்கு பலகணி (Window) இல்லாததனால் எதுவும் அதனுள் ஊடுருவ முடியாது. அதன் வளர்ச்சியின் இயல்பு அதற்குள்ளேயே ஒடுங்கி அல்லது பொதிந்து கிடக்கிறது. ஒரு மொனாட்டில் இதற்கு முன் இல்லாத எதுவும் இருக்க முடியாது அது போன்று எதுவும் புதிதாக உட்புகவும் முடியாது.[10]

இவ்வாறு ஒவ்வொரு மொனாடும் எதனாலும் ஊடுருவப்படாமலும் மற்றவைகளால் தாக்குறாமலும் காணப்படுவதுடன் மொனாடுகளுக்கு பலகணி இல்லாமலும் இருப்பதனால் அவை எவ்வாறு ஒன்றினையொன்று இயக்குகிறது? எனும் கேள்வி எழுகிறது. எனவே இக்கொள்கையை நிறைவு செய்ய மற்றுமொரு விளக்கம் தேவைப்படுகிறது. இவ்விடத்தில் லைப்பினிஸ்ட் முன்னமைந்த பொருத்தக் கொள்கை (Pre-established Harmony) எனும் கொள்கையை முன்வைக்கிறார். இக்கொள்கையின் படி மொனாடுகளுக்கிடையிலான காரணகாரியத் தொடர்பானது கடவுளினால் ஏலவே தீர்மானிக்கப்பட்ட அதாவது முன்னமே வரையறுக்கப்பட்டதாகும். கடவுள் இப்பிரபஞ்சத்தை தாம் தலையிடாமலேயே இயங்குமாறு அமைத்துள்ளார். இக்கோட்பாடு ஆன்மாவுக்கும் உடலுக்குமான சிக்கலை தக்கவாறு தீர்த்ததாக லைப்பினிஸ்ட் கருதினார். உயிருள்ள உடலும் (Organic body) அதன் நுண்ணிய பகுதிகளும் கடவுளால் முன் உருவாக்கப்பட்டவையே என்பதனை இக்கொள்கை விளக்குகிறது.[11]

**விமர்சனங்கள்**

1. லைப்பினிஸ்டின் சிந்தனைக்கு எதிராக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. உடலுக்கும் உளத்திற்குமான உறவு பற்றிய சிக்கலைத் தீர்க்க முன்னமைந்த பொருத்தக் கொள்கையை முன்வைத்து உடல் உளத்தின் செயற்பாடுகள் ஏலவே கடவுளால் முன்னமைக்கப்பட்டுள்ளது. எனும் அவரது முன்னமைந்த பொருத்தக் கொள்கை பல விமர்சனங்களுக்கு உட்படுகிறது. இக்கொள்கையின் படி இவர் பிரச்சினையைத் தீர்க்க கடவுளின் முழுவல்லமையை அடிப்படையாகக் கொள்கிறார் எனவும் கடவுளை ஏற்று அதன்படி இவர் கொடுக்கும் விளக்கம் மெய்யியல் ரீதியிலான விளக்கமல்ல என்றும் இது இவரது தெய்வீகப் பற்றினையே வெளிப்படுத்துகிறது என்றும் இது இறையியல்சார் விளக்கம் என்றும் அறிவு முறைக்கு இது பொருத்தமாக அமையாது என்றும் இவர் பிரச்சினையின் தன்மையை சிறிதே உணர்ந்ததனாலேயே அவ்வாறு குறிப்பிடுகிறார் எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

2. மேலும் லைப்பினிஸ்டின் மொனாடு பற்றிய விளக்கம் கியார்டோனோ புரூனோ (Giordano Barona) இன் சிந்தனையை ஒத்துள்ளது என்றும் குறிப்பிடப்படுகிறது. மொனாடு எனும் சொல் முதன் முதலில் புரூனோவினாலேயே கையாளப்பட்டுள்ளது. இவர் மொனாடுகளை கோளப்புள்ளிகள் எனவும் இவை ஆன்மீகத் தன்மை உடையவை என்றும் கருதினார். லைப்பினிஸ்டின் தத்துவக் கருத்துக்கள் புரூனோவின் கருத்துக்களையே ஒத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக

ஒரு பொருள் மிகச் சிறிதாகவோ மதிப்பின்றியோ இருக்கலாம் ஆனால் அது உயிரற்றிருப்பதில்லை எனும் கருத்தையே இவரும் குறிப்பிடுவதாக கருதலாம்.

3. லைப்பினிஸ் உடல்- உளம் பற்றிய சிக்கலைத் தீர்க்க முன்னமைந்த பொருத்தக்கொள்கை குறிப்பிட்டார். ஆயினும் இவரது இக்கொள்கை தறுவாய்கொள்கையினரின் (கெலிங்ஸ், மால்பிரான்ஸ்) ஆகியோரின் கருத்துக்களை ஒத்துள்ளது என்று கூறப்படுகிறது. உடலுக்கும் உளத்திற்குமான உறவை விளக்க தருவாய்க்கொள்கையினர் கையாண்ட இருகடிகாரங்கள் பற்றிய உதாரணத்தை லைப்பினிஸ்டும் கையாள்வதனாலும் கடவுள் எனும் கருத்தில் முழு நம்பிக்கையை கொண்டிருப்பதனாலும் இவரது கொள்கை தறுவாய்க் கொள்கையை ஒத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

4. மேலும் லைப்பினிஸ்ட் குறிப்பிடும் இவ்வுலகத்திலுள்ள எந்தப்பொருளும் சடமன்று எனும் கருத்தும் பரப்புடைமையற்றது என்பதும் அனைத்தும் ஆன்மீக ஆற்றலுடையது என்பது போன்ற கருத்துக்கள் சாதாரண நடைமுறை அறிவுக்கு பொருந்தாத தன்மையினைக் கொண்டிருப்பதனையும் காணலாம்.

**08. முடிவுரை (Conclusion)**

முடிவாக தொகுத்து நோக்கும் பொழுது கிரேக்கம் முதல் ஆராயப்பட்டு வந்த உடல்-உளந் தொடர்பான பிரச்சினைக்கு பல தீர்வுகள் முன்வைக்கப்பட்டிருப்பினும் நவீன காலத்திலேயே இப்பிரச்சினை தீவிரமாக ஆராயப்பட்டது. குறிப்பாக டேக்காட், ஸ்பினோஸா, தறுவாய்க்கொள்கையினர் லைப்பினிஸ்ட் போன்றோர் ஆராய்ந்தனர். ஆயினும் இப்பிரச்சினைக்கான இவர்களது தீர்வுகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒருவகையில் குறைபாடுடையதாகவே காணப்பட்டது. எனவேதான் உடல்-உளம் பற்றிய பிரச்சினை பிற்காலத்தில் மொழி பற்றிய பிரச்சினையாக மாற்றமடைந்து பகுப்பாய்வு மெய்யியலுக்குள் செல்கின்றது. இதனாலேயே பகுப்பாய்வு மெய்யியளாளரான விக்கன்ஸ்ரைன் மெய்யியல் பிரச்சினை என்பது மொழியினால் போடப்பட்ட கட்டுக்களை போன்றது எனவும் இதனை அவிழ்த்து விடுவதன் மூலமே தீர்வுகள் சாத்தியமாகும் என்றார். ஆயினும் இப்பிரச்சினைக்கு மொழி மெய்யியலாளர்களினாலும் தீர்வு காண முடியவில்லை. எனவே இன்றுவரை தொடர்கின்ற உடல்-உளச் செயற்பாடு தொடர்பான மர்மத்திற்கு எதிர்காலத்தில் விஞ்ஞானமே சரியான தீர்வை காண முயற்சிக்க வேண்டும். மனம் என்பது உண்மையில் ஒரு பொருள் தன்மை சார்ந்ததா? அல்லது நடத்தைகளின் வடிவமா? எனும் அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்வதனூடாக இப் பிரச்சினையினைக்கு விடை காணப்படலாம் என்ற கருத்தினை இவ்வாய்வு முன்வைக்கிறது.

**09. உசாத்துணை நூல்கள். (References)**

[1] https://en.wikipedia.org/wiki/Mind%E2%80%93body_problem.

[2] Lee, H.D.P. (1958). *Plato the Republic*. The Penguin Classics, Mitcham, Victoria, pp.387- 400.

[3] Samuel Enoch Stumpf. (1993). *Elements of Philosophy*. Tata McGraw Hill, New York, pp.451-455.

[4] Schwegler, A. (1996). *History of Philosophy*. Anmol Publication (Pvt) Ltd, New Delhi, pp.170- 171.

[5] Sahakian, W.S. (1968). *Outline History of Philosophy*. Barnes & Noble, INC, New York, m pp.148-149.

[6] Cahn, S.M., (1985). *Classics of Western Philosophy*. (2nd ed), Hackett Publishing Company, Indianapolis, pp.467-470.
[7] http://www.newworldencyclopedia.org/entry/Monad.
[8] Op.Cit. Sahakian, W.S., pp.148-150.
[9] William Kelley Wright, (1941). *A History of Modern Philosophy*. The Macmillan Company, New York, p.123.
[10] Ibid, pp. 120-122.
[11] Russell, B. (1948). *History of Western Philosophy*. George Allen and Unwin Ltd, London, pp.605-608.